**சார்பு நீதிமன்றம், ஓமலூர்**

SC.No.56/2025

நாள். 06.02.2026

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 06.02.2026ம் நாளாகிய இன்று திருமதி.சித்ரா, கண்காணிப்பாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| சாட்சி: | :.அ.சா.1 | ஜாதி | :----------- |
| பெயர் | மாரியம்மாள் | தொழில் | : |
| த/பெ. | : முருகேசன் | மதம் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

**(All Accused present)**

**முதல் விசாரணை:-**

1. நான் பெரியேரிப்பட்டி கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது மகன் ராமுவின் மகளை காதலித்து திருமணம் செய்து கொண்டார். அதனால் எங்களுக்கும், எனது மருகளின் குடும்பத்திற்கும் பிரச்சனை ஏற்பட்டது. எனவே நான் காவல் நிலையத்திற்கு சென்று எங்கள் குடும்பத்திற்கு பாதுகாப்பு கொடுக்கும்படி கேட்டேன். போலீசார் என்னிடம் வெள்ளை தாளில் கைரேகை வாங்கி கொண்டார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கைரேகை என்னுடையதுதான். அந்த கைரேகை மட்டும் **அ.சா.ஆ.1.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதிக்கப்பட்டதன்பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** கடந்த 18.03.2016ம் தேதி காலை 8 மணிக்கு எதிரிகள் அனைவரும் என் வீட்டிற்கு வந்து என்னை பார்த்து கண்டாரஓழி தேவடியா ஊர் மேய போனவளே என்று திட்டியதாக போலீசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால் இல்லை. மேலும் எதிரி ராமு என் மகள் கனிமொழியை காணவில்லை என்றும், உன் மகன் தான் கூட்டிக்கொண்டு போய்விட்டான் என்று திட்டியதாகவும் மற்றும் எதிரிகள் என்னை மகனை வீட்டை விட்டு வெளியே வரச்சொல்லி மிரட்டியதாகவும் போலீசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால் இல்லை.

2. மேலும், எதிரிகள் சத்தியமூர்த்தி, குழந்தைவேல் ஆகியோர் என்னை கெட்ட வார்த்தையால் திட்டியும், எதிரிகள் சத்தியமூர்த்தி, குழந்தைவேல் ஆகியோர் என்னை நகர விடாமல் பிடித்து கொண்டார்கள் என்றும், எதிரி அருணாச்சலம் என் வீட்டிற்கு வெளியே இருந்த விறகு கட்டையை எடுத்து வலது முழங்கால், இடது மணிக்கட்டு, இடது இடுப்பு ஆகிய இடங்களில் அடித்தும், மற்றும் எதிரிகள் வினோத்குமார், செந்தில்குமார், குழந்தைவேல், ஆகியோர்கள் சிமெண்ட் அட்டையால் என் மாமனாரை அடித்தும், அதே சிமெண்ட் கட்டையால் என் வீட்டின் கதவு, சன்னலை உடைத்தார்கள் என்றும், எதிரி ராமு மின்சார ஓயரை அறுத்து சேதப்படுத்தினார் என்றும் மற்றும் எதிரிகள் ராமு, அருணாச்சலம், சத்தியமூர்த்தி, வினோத்குமார், செந்தில்குமார் ஆகியோர்கள் உன்னை விடமாட்டோம் உன் சாவு என் கையில் தான் என்று மிரட்டினார்கள் என்றும், எதிரி குழந்தைவேல் கையில் இருந்த விறகு கட்டை எடுத்து சென்றுவிட்டார்என்றும் போலீசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

3. எனது மாமனார் கிருஷ்ணனும், என் மாமியார் ரத்தினம்மாளும், மேற்படி சம்பவத்தை பார்த்து பயந்து கொண்டு ஓடி ஒழிந்து கொண்டார்கள் என்று

போலீசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. பின்னர் நான் மேற்படி சம்பவங்களை என் மகனுக்கு தெரியப்படுத்தியதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எனது இரண்டு வீட்டையும் உடைத்து ரூ.50,000/– மதிப்புள்ள பொருட்களை உடைத்து சேதப்படுத்தியதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

4. மேற்கண்ட சம்பவங்களை போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது நானும், எதிரிகளும் சமாதானம் ஆகிவிட்டதால் எதிரிகளை வழக்கில் இருந்து காப்பற்றவேண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தர்ப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**

சாட்சி சொன்ன சங்கதிகள் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன் கையொப்பம் இடப்பட்டது.

(ஒப்பம்/–த.மாலதி),
உதவி அமர்வு நீதிபதி,
ஓமலூர்.

**சார்பு நீதிமன்றம், ஓமலூர்**

SC.No.56/2025

நாள். 06.02.2026

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 06.02.2026ம் நாளாகிய இன்று திருமதி.சித்ரா, கண்காணிப்பாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| சாட்சி: | :.அ.சா.2 | ஜாதி | :----------- |
| பெயர் | ரத்தினம்மாள் | தொழில் | : |
| த/பெ. | | மதம் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

**(All Accused present)**

**முதல் விசாரணை:-**

1. நான் பெரியேரிப்பட்டி கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது பேரன் எதிரி ராமுவின் மகளை காதலித்து திருமணம் செய்து கொண்டார். அதனால் எங்களுக்கும், எனது பேரனின் மாமனார் குடும்பத்திற்கும் பிரச்சனை ஏற்பட்டது. எனவே என் மருமகள் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தார் மற்றப்படி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதிக்கப்பட்டதன்பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** கடந்த 18.03.2016ம் தேதி காலை 8 மணிக்கு எதிரிகள் அனைவரும் என் வீட்டிற்கு வந்து என் மருமகளைப் பார்த்து கண்டாரஓழி தேவடியா ஊர் மேய போனவளே என்று திட்டியதாக போலீசார் விசாரணையில்

சொல்லியிருக்கிறேன் என்றால் இல்லை. மேலும் எதிரி ராமு என் மகள் கனிமொழியை காணவில்லை என்றும், உன் பேரன் தான் கூட்டிக்கொண்டு போய்விட்டான் என்று என் மருமகளை திட்டியதாகவும் மற்றும் எதிரிகள் என் பேரனை வீட்டை விட்டு வெளியே வரச்சொல்லி மிரட்டியதாகவும் போலீசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால் இல்லை.

2. மேலும், எதிரிகள் சத்தியமூர்த்தி, குழந்தைவேல் ஆகியோர் என் மருமகளை கெட்ட வார்த்தையால் திட்டியும், எதிரிகள் சத்தியமூர்த்தி, குழந்தைவேல் ஆகியோர் என் மருமகளை நகர விடாமல் பிடித்து கொண்டார்கள் என்றும், எதிரி அருணாச்சலம் என் வீட்டிற்கு வெளியே இருந்த விறகு கட்டையை எடுத்து என் மருமகளின் வலது முழங்கால், இடது மணிக்கட்டு, இடது இடுப்பு ஆகிய இடங்களில் அடித்தும், மற்றும் எதிரிகள் வினோத்குமார், செந்தில்குமார், குழந்தைவேல், ஆகியோர்கள் சிமெண்ட் அட்டையால் என் கணவரை அடித்தும், அதே சிமெண்ட் கட்டையால் என் வீட்டின் கதவு, சன்னலை உடைத்தார்கள் என்றும், எதிரி ராமு மின்சார ஓயரை அறுத்து சேதப்படுத்தினார் என்றும் மற்றும் எதிரிகள் ராமு, அருணாச்சலம், சத்தியமூர்த்தி, வினோத்குமார், செந்தில்குமார் ஆகியோர்கள் என் மருமகள விடமாட்டோம் உன் சாவு என் கையில் தான் என்று மிரட்டினார்கள் என்றும், எதிரி குழந்தைவேல் கையில் இருந்த விறகு கட்டை எடுத்து சென்றுவிட்டார்என்றும் போலீசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

3. மேற்படி சம்பவத்தை பார்த்து நானும், என் கணவரும், பயந்து கொண்டு ஓடி ஒழிந்து கொண்டோம் என்று போலீசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எனது இரண்டு வீட்டையும் உடைத்து ரூ.50,000/- மதிப்புள்ள பொருட்களை உடைத்து

சேதப்படுத்தியதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

4. மேற்கண்ட சம்பவங்களை போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது நானும், எதிரிகளும் சமாதானம் ஆகிவிட்டதால் எதிரிகளை வழக்கில் இருந்து காப்பற்றவேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தர்ப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**

சாட்சி சொன்ன சங்கதிகள் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன் கையொப்பம் இடப்பட்டது.

(ஒப்பம்/–த.மாலதி),
உதவி அமர்வு நீதிபதி,
ஓமலூர்.

**சார்பு நீதிமன்றம், ஓமலூர்**
SC.No.56/2025

நாள். 06.02.2026

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 06.02.2026ம் நாளாகிய இன்று திருமதி.சித்ரா, கண்காணிப்பாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| சாட்சி: | :.அ.சா.3 | ஜாதி | :----------- |
| பெயர் | முருகேசன் | தொழில் | : |
| த/பெ. | | மதம் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

**(All Accused present)**

**முதல் விசாரணை:-**

1. நான் பெரியேரிப்பட்டி கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி. அசா.2 எனது தாயார். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது மகன் ராமுவின் மகளை காதலித்து திருமணம் செய்து கொண்டார். அதனால் எங்களுக்கும், எனது மருகளின் குடும்பத்திற்கும் பிரச்சனை ஏற்பட்டது. எனவே என் மனைவி காவல் நிலையத்திற்கு சென்று எங்கள் குடும்பத்திற்கு பாதுகாப்பு கொடுக்கும்படி கேட்டார். போலீசார் என்னிடம் வெள்ளை தாளில் கைரேகை வாங்கி கொண்டார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2.** தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான், அந்த கையெழுத்து மட்டும்

அ.சா.ஆ.3. தற்போது என்னிடம் காட்டப்படும் கண்ணாடி துண்டுகள், சிமெண்ட் அட்டைகள், செங்கற்கள் ஆகியவைகள் குறித்து எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதிக்கப்பட்டதன்பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1.** கடந்த 18.03.2016ம் தேதி காலை 8 மணிக்கு எதிரிகள் அனைவரும் என் வீட்டிற்கு வந்து என் மனைவியை பார்த்து கண்டாரஓழி தேவடியா ஊர் மேய போனவளே என்று திட்டியதாக என் மனைவி என்னிடம் சொன்னார் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் இல்லை. மேலும் எதிரி ராமு என் மகள் கனிமொழியை காணவில்லை என்றும், உன் மகன் தான் கூட்டிக்கொண்டு போய்விட்டான் என்று திட்டியதாகவும் மற்றும் எதிரிகள் என் மகனை வீட்டை விட்டு வெளியே வரச்சொல்லி மிரட்டியதாக என் மனைவி என்னிடம் சொன்னதாக போலீசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால் இல்லை.

2. மேலும், எதிரிகள் சத்தியமூர்த்தி, குழந்தைவேல் ஆகியோர் என் மனைவியை கெட்ட வார்த்தையால் திட்டியும், எதிரிகள் சத்தியமூர்த்தி, குழந்தைவேல் ஆகியோர் என் மனைவியை நகர விடாமல் பிடித்து கொண்டார்கள் என்றும், எதிரி அருணாச்சலம் என் வீட்டிற்கு வெளியே இருந்த விறகு கட்டையை எடுத்து வந்து என் மனைவியின் வலது முழங்கால், இடது மணிக்கட்டு, இடது இடுப்பு ஆகிய இடங்களில் அடித்தும், மற்றும் எதிரிகள் வினோத்குமார், செந்தில்குமார், குழந்தைவேல், ஆகியோர்கள் சிமெண்ட் அட்டையால் என் அப்பாவை அடித்தும், அதே சிமெண்ட் கட்டையால் என் வீட்டின் கதவு, சன்னலை உடைத்தார்கள் என்றும், எதிரி ராமு மின்சார ஒயரை அறுத்து சேதப்படுத்தினார் என்றும்

மற்றும் எதிரிகள் ராமு, அருணாச்சலம், சத்தியமூர்த்தி, வினோத்குமார், செந்தில்குமார் ஆகியோர்கள் என் மனைவியை விடமாட்டோம் உன் சாவு என் கையில் தான் என்று மிரட்டினார்கள் என்றும், எதிரி குழந்தைவேல் கையில் இருந்த விறகு கட்டை எடுத்து சென்றுவிட்டார்என்றும் மேற்படி சம்பவம் குறித்து எனது இளைய மகன் ரவி எனக்கு போன் மூலம் தகவல் சொன்னதாக போலீசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

3. எனது அப்பா கிருஷ்ணனும், என் அம்மா ரத்தினம்மாளும், மேற்படி சம்பவத்தை பார்த்து பயந்து கொண்டு ஓடி ஒழிந்து கொண்டதாகவும், எதிரிகள் எனது இரண்டு வீட்டையும் உடைத்து ரூ.50,000/– மதிப்புள்ள பொருட்களை உடைத்து சேதப்படுத்தியதாக கொடுத்த புகாரின்பேரில் கடந்த 20.03.2016ம் தேதி இரவு 7.15 மணிக்கு போலீசார் என் வீட்டிற்கு வந்து லைட் வெளிச்சம் ஏற்பாடு செய்து என்னையும் என் தகப்பனாரையும் சாட்சியாக வைத்து சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், என் அப்பாவும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம் என்றும் மற்றும் அன்று இரவு 7.45 மணிக்கு எங்கள் முன்னிலையில் உடைந்த சிமெண்ட் அட்டை துண்டுகள் இரண்டையும், அரை செங்கல் இரண்டையும், உடைந்த சன்னல் கண்ணாடி துண்டுகள் மூன்றையும், கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும், அதிலும் சாட்சி கையொப்பம் செய்தோம் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

மேற்கண்ட சம்பவங்களை போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது நானும், எதிரிகளும் சமாதானம் ஆகிவிட்டதால் எதிரிகளை

வழக்கில் இருந்து காப்பற்றவேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தர்ப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**

சாட்சி சொன்ன சங்கதிகள் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன் கையொப்பம் இடப்பட்டது.

(ஒப்பம்/–த.மாலதி),
உதவி அமர்வு நீதிபதி,
ஓமலூர்.